Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 4.3.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 4.3.2025 நேரம் மாலை 6.10 மணி

--------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இந்தியாவை சுயசார்பு நாடாக மேம்படுத்தும் வகையில், அரசு, கடந்த 10 ஆண்டுகளில் சீர்திருத்தங்களை துரிதப்படுத்தி இருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இந்தியாவின் **மறுசுழற்சிப் பொருளாதாரம்**, 2050-ஆம் ஆண்டிற்குள், 2 டிரில்லியன் மதிப்புள்ளதாக மேம்பட முடியும் என்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் கூறி உள்ளார்.

மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜே பி நட்டா இன்று புதுடெல்லியில், தேசிய சுகாதார இயக்கத்திற்கான வழிகாட்டும் குழுவின் 9-ஆவது கூட்டத்தை, தலைமை ஏற்று நடத்தினார்.

**தேர்தல் அதிகாரிகள்**, தங்களின் சட்டப்பூர்வ கடமைகளை, கவனமாகவும், வெளிப்படையிலான முறையிலும் நிறைவேற்ற வேண்டுமென, தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ் குமார் கூறி உள்ளார்.

மோடி-வெபினார்

இந்தியாவை சுயசார்பு நாடாக மேம்படுத்தும் தொலைநோக்கு பார்வையுடன் அரசு செயல்பட்டு வருவதாகவும் கடந்த 10 ஆண்டுகளில் நிதி, வெளிப்படைத் தன்மை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி உள்ளிட்ட துறைகளில் சீர்திருத்தங்களை தாங்கள் தொடர்ச்சியான முறையில் துரிதப்படுத்தி இருப்பதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். புரட்சிகரமான மாற்றங்கள் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை கொண்டு வருவதில், சிறு-குறு. மற்றும் நடுத்தர தொழில்

துறைக்கு முக்கிய பங்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வளர்ச்சிக்கான முக்கிய உந்து சக்தியாக, சிறு-குறு, மற்றும் நடுத்தர தொழில் துறையை பயன்படுத்துவது குறித்தும், உற்பத்தி, ஏற்றுமதி குறித்தும், முதலீடு மற்றும் வர்த்தகம் புரிதலின் எளிமையாக்கம் குறித்தும், இணையதளம் மூலம் இன்று நடைபெற்ற, பட்ஜெட்டிற்கு பிந்தைய 3 கருத்தரங்குகளில், பிரதமர் உரையாற்றினார். பிரதமரின் உரை குறித்து மேலும் சில விவரங்கள்.

**(வாய்ஸ்)**

நிலையான கொள்கைகளும், சாதகமான வர்த்தகச் சூழலுமே, வளர்ச்சிக்கு மிக முக்கியம் என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார். இந்தியாவில் வர்த்தகம் புரிவதை எளிமையாக்கவே, **ஜன் விஸ்வாஸ்** சட்டத்தை அரசு கொண்டு வந்திருப்பதாகவும், வருமானவரி சட்டங்கள் எளிமையாக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்க, பட்ஜெட்டில் முக்கிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் கூறினார். கொரோனா பெருந்தொற்றின் தாக்கங்களைக் குறைக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் காரணமாகவே, வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியா மேம்பட்டுள்ளதாகவும் தற்போது இந்தியா உடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள உலக நாடுகள் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக அளவிலான பொருள் விநியோக சங்கிலியில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை, இந்திய தொழில் முனைவோர் சாதகமான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பிரதமர் கேட்டுக் கொண்டார். உலக அளவில் அதிக வரவேற்புள்ள புதுமையான பொருட்களை தயாரித்து ஏற்றுமதி செய்வதில் தொழில் முனைவோர் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார். பல்வேறு துறைகளில் அரசு அமல்படுத்தி வரும், உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டத்தினால் உற்பத்தி சுமார் 13 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்து, 1 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகளும் ஈர்க்கப்பட்டுள்ளதாக பிரதமர் மேலும் கூறினார்.

*ராஜ்நாத்*

சைபர் தாக்குதல், விண்வெளி சார்ந்த தடைகள் மற்றும் கலப்பு வகை போர் தந்திரங்களால் உலக நாடுகளின் பாதுகாப்பிற்கு புதிய சவால்கள் ஏற்பட்டுள்ள நிலையில், உள்நாட்டு பாதுகாப்பிற்கும் புறநிலை பாதுகாப்பிற்கும் இடையிலான வித்தியாசமும் குறைந்து வருவதால், உலக நாடுகளின் பாதுகாப்பு நிலவரங்கள் மேலும்

மேலும் சிக்கலாகி வருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார். **உள்நாட்டு பாதுகாப்பிற்கான நவீன தொழில் நுட்பங்கள்** என்பது குறித்து புதுடெல்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். பயங்கரவாதம், இடதுசாரி தீவிரவாதம் போன்ற பிரச்சனைகளாலும் உலகின் குறிப்பிட்ட பகுதிகள் பாதிக்கப் பட்டுள்ளதால் இத்தகைய பகுதிகளுக்கான பிரத்யேக தீர்வுகள் மீது முக்கிய கவனம் செலுத்துதல் அவசியம் என பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்தினார். இந்தியாவில் உள்நாட்டு பாதுகாப்பிற்கான பல்வேறு அமைப்புகள் ஒருங்கிணைந்த முறையில் செயல்படுவதை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார். பாதுகாப்பு துறைக்கான புதிய தொழில் நுட்பங்களை, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கழக விஞ்ஞானிகள் உருவாக்கி இருப்பதை திரு ராஜ்நாத் சிங் பாராட்டினார். இணை ராணுவப் படைகள் மற்றும் இதர பாதுகாப்பு அமைப்புகளை நவீனமாக்குவதிலும் இப்புதிய தொழில் நுட்பங்கள் பேருதவி புரிந்திருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

*பஞ்சாயத்து ராஜ்*

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மகளிர் மக்கள் பிரதிநிதிகளின் தேசிய மாநாட்டில், பெண்களை வலுவான பஞ்சாயத்து தலைவர்களாக மேம்படுத்துவதற்கான, **சஷக்த் பஞ்சாயத்து நேத்ரி** இயக்கம், தொடக்கி வைக்கப்பட்டது. மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், தற்போது நாட்டில் 14 லட்சம் பெண்கள், பஞ்சாயத்து அமைப்புகளுடன் சம்பந்தப் பட்டுள்ளதாகவும், இவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்க தேவை இருப்பதாகவும் கூறினார். பெண்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்தும் வகையில், லாக்பதி தீதி, மற்றும், நமோ டிரோன் தீதி திட்டங்களை அரசு ஏற்கனவே செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு அன்னபூரணா தேவி இந்நிகழ்ச்சியில் பேசுகையில், பெண்கள் தலைமையிலான வளர்ச்சி மூலமாகவே, சமூகத்திலும் சாதகமான மாற்றங்களை கொண்டு வர முடியும் என்றார். பெண் மக்கள் பிரதிநிதிகள், தங்கள் சிறப்பான பணிகள் மூலம், கிராமவாசிகள் அனைவரும் உணர்வூக்கமாக திகழ வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, தேசிய மகளிர் மக்கள் பிரதிநிதிகள் மாநாட்டில் நாடெங்கிலும் இருந்து ஆயிரத்து 200-க்கும் மேற்பட்ட பெண் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

*சுழற்சி பொருளாதாரம்*

இந்தியாவின் **மறுசுழற்சிப் பொருளாதாரம்**, 2050-ஆம் ஆண்டிற்குள், 2 டிரில்லியன் மதிப்புள்ளதாக மேம்பட முடியும் என்றும் இதனால் 10 மில்லியன் வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் கூறி உள்ளார். இன்று ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில், **ஆசிய-பசிபிக் மறுசுழற்சி பொருளாதாரப் பேரவை**யின் 12-ஆவது பிராந்திய மாநாட்டில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். இந்தியாவின் மறுசுழற்சிப் பொருளாதார இயக்கத்தில், வீண் விரையங்கள் மற்றும் மாசுபாட்டைக் குறைக்கவும், இயற்கை ஆதாரங்களை புத்தாக்கம் செய்யவும் முக்கியத் துவம் அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். மறுசுழற்சிப் பொருளாதார செயல்பாடுகளை ஊக்குவிக்கும் பணிகளில், முழுமையாக எல்லாத் துறைகளையும் ஈடுபடுத்தும் அணுகுமுறையை அரசு கடைபிடித்து வருவதாக அவர் கூறினார். ஆசியா- பசிபிக் பிராந்தியத்தை, **மறுசுழற்சி சமூக**மாக மேம்படுத்துவதன் மூலம், **கார்பன் சமநிலை** மற்றும் **நீடித்த வளர்ச்சி இலக்கு**களை எட்டுதல் என்ற கருப்பொருள் அடிப்படையில், இந்த 3 நாள் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

*ஆஹார்*

உலகின் **பசித் தேவை**களை பூர்த்தி செய்யும் வல்லமை இந்தியாவிற்கு இருப்பதாகவும் இதற்கேற்ற சூழல் ஒன்றை நாட்டில் உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மத்திய உணவு பதனீட்டுத் துறை அமைச்சர் திரு சீராக் பாஸ்வான் கூறி உள்ளார். இன்று புதுடெல்லி பாரத் மண்டபத்தில், ஆஹார் என்னும் சர்வதேச உணவு மற்றும் விருந்தோம்பல் கண்காட்சியை தொடக்கி வைத்துப் பேசிய அவர் உலக நாடுகளின் ஒவ்வொரு உணவுச் சந்தையிலும் குறைந்த பட்சம் ஒரு இந்திய உணவு கிடைப்பதை, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்புடன் விரைவிலேயே உறுதிப்படுத்த முடியும் என நம்பிக்கை வெளியிட்டார். இந்திய வர்த்தக அபிவிருத்தி அமைப்பின் தலைவர் திரு பிரதீப் சிங் கரோலா, இந்நிகழ்ச்சியில் பேசுகையில் இவ்வாண்டு ஆஹார் கண்காட்சியில், உணவுத் துறை சார்ந்த ஆயிரத்து 700 நிறுவனங்கள் பங்கேற்பதாகவும், 22 நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் இதில் அடங்குவார்கள் என்றும் கூறினார். இந்த 5 நாள் கண்காட்சியை, 1 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

*சுகாதார இயக்கம்*

மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜே பி நட்டா இன்று புதுடெல்லியில், தேசிய சுகாதார இயக்கத்திற்கான வழிகாட்டும் குழுவின் 9-ஆவது கூட்டத்தை, தலைமை ஏற்று

நடத்தினார். தேசிய சுகாதார இயக்கத்தின் இலக்குகளுக்கு ஏற்ப, மக்களுக்கான சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான, கொள்கை கட்டமைப்புகள், செயல்பாட்டு உத்திகள், மற்றும் நிதி வரைமுறைகள் குறித்து இக்கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது. மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர்கள் திரு பிரதாப் ராவ் ஜாதவ், திருமதி அனுபிரியா பட்டேல், நிதி ஆயோக் துணை தலைவர் திரு சுமன் பேரி உள்ளிட்டவர்களும், இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

*தேர்தல் ஆணையர்*

மாநிலங்களின் **தலைமை தேர்தல் அதிகாரி**களும், **மாவட்ட தேர்தல் அதிகாரி**கள், மற்றும், **வாக்குச் சாவடி நிலை** அதிகாரிகளும், சட்டப்பூர்வமான தத்தம் கடமைகளை, கவனமாகவும், வெளிப்படையிலான முறையிலும் நிறைவேற்ற வேண்டுமென, தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ் குமார் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு இடையிலான 2 நாள் மாநாட்டில் அவர் உரையாற்றினார். தேர்தல் தொடர்பாக அரசியல் கட்சிகள் எழுப்பும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண, அதிகாரிகள், சட்டப்பூர்வமான எல்லா நிலைகளிலும், அனைத்துக் கட்சிக் கூட்டங்களை அவ்வப்போது நடத்த வேண்டும் என அவர் கூறினார். 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வாக்காளர்களாக பதிவு பெறுவதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். தேர்தலில் வாக்களிக்க, எவரும் 2 கிலோமீட்டருக்கு மேல் செல்லத் தேவையின்றி எல்லாப் பகுதிகளிலும் வாக்குச் சாவடிகளை அமைக்க வேண்டும் என்றும், 800 முதல் ஆயிரத்து 200 வாக்காளர்களுக்கு, ஒரு வாக்குச் சாவடி இருக்க வேண்டும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் அறிவுறுத்தினார்.

*கண் பார்வை*

கண் பார்வை குறைபாடுகளை, கண் யோகா மற்றும் இதர பயிற்சிகள் மூலம் இயற்கையான வழியில் சரிபடுத்துவதற்கான ஆரோ-பெர்ஃபெக்ட் விஷன் திட்டம், ஆரோவில்லில் தொடக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் இத்திட்டம் குறிப்பாக கிட்டப் பார்வை போன்ற பிரச்சனைகளுக்கு மாற்றுத் தீர்வாக அமையும் என்று ஆரோவில் அமைப்பின் செயலர் டாக்டர் ஜெயந்தி ரவி தெரிவித்துள்ளார். கணினி மற்றும் மொபைல் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில் குழந்தைகளிடையே கண் பார்வை குறைபாடுகளை தடுக்கவும் இத்திட்டம் உதவி கரமாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

*கிரிக்கெட்*

ஐசிசி சாம்பியன் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில், இந்தியா-ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையே இன்று துபாயில் நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் டாஸ் ஜெயித்து முதலில் ஆடிய ஆஸ்திரேலிய அணி, 49.3 ஓவர்களில், 264 ரன்னுக்கு ஆட்டம் இழந்து, இந்தியாவிற்கு, 265 ரன் என்னும் வெற்றி இலக்கை நிர்ணயித்துள்ளது. இத்தொடரில், தென்னாப்பிரிக்கா-நியுசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2-ஆவது அரை இறுதிப் போட்டி, லாகூரில் நாளை நடைபெறும்.

*யோகா*

மத்திய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகமும், யோகாசனா பாரத் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள, 2-ஆவது ஆசிய யோகா சாம்பியன் பட்டப் போட்டிகள், புதுடெல்லியில், வரும் 29 முதல், 31 ஆம் தேதி வரை நடைபெற உள்ளன. ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் உள்ளிட்ட அமைப்புகளின் ஆதரவுடன் கூடிய இப்போட்டிகளில், 16-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்க உள்ளன. இந்தியாவின் பாரம்பரிய ஞானம், உலக அளவில் நவீன விளையாட்டாக மேம்படுவதை கொண்டாடும் விழாவாக, இப்போட்டிகள் அமையும் என்று, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

*மீனவர்கள்*

இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு, இலங்கையில் உள்ள இலங்கை அதிகாரிகளால் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்று சென்னை வந்து சேர்ந்த 14 தமிழக மீனவர்களை, மாநில மீன்வளத் துறை அதிகாரிகள், அவரவர் சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர். கடந்த ஆண்டு டிசம்பர் 23, இவ்வாண்டு பிப்ரவரி 7 ஆகிய தேதிகளில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ராமேஸ்வரம் மீனவர்களும் இதில் அடங்குவர்.

*நீதிமன்ற தடை*

கார்ப்பரேட் நிறுவனம் ஒன்றின் புதிய பங்கு வெளியீட்டை மும்பை பங்குச் சந்தையில் பட்டியலிடுவதில் நடந்ததாக கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக, பங்கு பரிமாற்ற வாரியத்தின் முன்னாள் தலைவர் திரு **மாதவி புரி புச்** மற்றும் பிறர் மீது லஞ்ச ஊழல் வழக்கு பதிவு செய்யுமாறு, மகாராஷ்டிர லஞ்ச ஒழிப்புத் துறைக்கு, **பணச் சலவை தடுப்பு நீதிமன்றம்** வெளியிட்ட உத்தரவை, மும்பை உயர்நீதிமன்றம் நிறுத்தி

வைத்துள்ளது. பணச் சலவை தடுப்பு நீதிமன்றத்தின் உத்தரவை ஆட்சேபித்து, இவர்கள் நேற்று உயர்நீதி மன்றத்தை அணுகி இருந்தனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவை சுயசார்பு நாடாக மேம்படுத்தும் வகையில், அரசு, கடந்த 10 ஆண்டுகளில் சீர்திருத்தங்களை துரிதப்படுத்தி இருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இந்தியாவின் **மறுசுழற்சிப் பொருளாதாரம்**, 2050-ஆம் ஆண்டிற்குள், 2 டிரில்லியன் மதிப்புள்ளதாக மேம்பட முடியும் என்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் கூறி உள்ளார்.

மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜே பி நட்டா இன்று புதுடெல்லியில், தேசிய சுகாதார இயக்கத்திற்கான வழிகாட்டும் குழுவின் 9-ஆவது கூட்டத்தை, தலைமை ஏற்று நடத்தினார்.

**தேர்தல் அதிகாரிகள்**, தங்களின் சட்டப்பூர்வ கடமைகளை, கவனமாகவும், வெளிப்படையிலான முறையிலும் நிறைவேற்ற வேண்டுமென, தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ் குமார் கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 4.3.2025/Script.

-----------------------------------